பதிவு எண் — M.5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை—4 குருகுலம், மாம்பாக்கம்; கர, தை; 8—2—52. தளிர்—19

குருகுலத்தின் குறிக்கோள் :

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

## விழாவும் வழிபாடும்

உலகில் பல வேறு சமயங்கள் காணப் பெறுகின்றன. பல் பெருஞ்சமயம் சொல்லும் பொருளும் முடிவில் வாக்கு மனங் கடந்த ஒரு பரம் பொருளைத் தான் சார்கின்றன; எனினும் அப்பரம் பொருளை அடைய ஒன்றுக் கொன்று புறத்தளவில் சிறிது மாறு பட்ட பலவகைச் சமயக் கோட்பாடும் வேறு வேறான கடவுளர் வழிபாடும் மக்களிடையிற் காணப்படுகின்றன. கடவுளர் உயர்ந்த நிலையில் வைத்துப் போற்றப்படுபவர் ஆதலின 'வானோர்' என்றும் அழைக்கப் பெறுவர்.

வானோர்க்கு மக்களால் பூசை (வழிபாடும்) யும் விழாக்களும் செய்யப்படுகின்றன. வழிபாடு, மக்கள் வாழ்க்கைக்கு இன்றி யமையாதது. பல வேறு சிக்கல்களில் கிடந்துழன்று, உலகப் பிணிப்பில் ஆழ்ந்து வருந்தும் உள்ளத்துக்கு வழிபாட்டை யொப்ப அமைதியும் இன்பமும் தரும் பொருள் வேறில்லை. இயல்பான நெறியினின்று வழுக்கி வீழாமல் கடவுளர் பூசை மக்களைக் காக்கின் றது. நாடோறும் செய்யும் பூசைகளில் நிகழும் சிறு குறைபாடு களும் விழாக்களில் போக்கப் படுகின்றன.

இத்தகைய விழாவும் வழிபாடும் நடைபெற உலகில் அமைதி வேண்டும். பசியும் பிணியும் நீங்கி மாநிலம் செழிக்க மழை பெய் யாவிடின் இவ் வமைதி உண்டாவ தெங்ஙனம்? மழை பெய்யாது வானம் வறண்டு போனால் துன்பமுறும் மக்கள் உள்ளமும் வறண்டு போய் எவ்வகைச் செயலுக்கும் தகுதி யின்றி ஓய்ந்து போம். எனவே, கடளர் வழிபாட்டுக்கும் விழவிற்கும் மழையே முதற்கார ணம் என்பதனை இத் திருக்குறள் தெரிவிக்கின்றது.

சிறப் பொடு பூசனை
செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு

வானோர்க்கும் ஈண்டுச் சிறப் பொடு பூசனை செல்லாது—தேவர் கட்கும் இவ் வுலகின் மக்களால் செய்யப் படும் விழாவும் பூசை யும் நடவாது; வானம் வறக்கும் எல்—மழை பெய்யாதாயின்.

விழாவோடு கூடிய வழிபாடு என்று பொருள் பட வருவதால் செல்லாது என்னும் ஒன்றன் பால் வினைமுற்றோடு முடிந்தது. உம்மை, சிறப்பு உம்மை. நித்திய பூசைகளில் உண்டாகும் குறை பாடு போகச் செய்யப்படுவது நைமித்திகம் (விழா) ஆதலின் அதனை முற்கூறினார். சிறப்பு—விழா; வானம் வறளல்—மழை பெய்யா தொழிதல்.

வழிபாடு செய்து பேறு பெறு வதற்கு இவ்வுலகமே சிறந்த கருவியாய்த் துணை செய்தலின், மற்ற உலகங்களை நீக்கி இவ்வுல கத்தைச் சிறப்பாக 'ஈங்கு' எனக் குறிப்பிட்டார்.

வானோர்க்குச் செய்யப்படும் சிறப்புக்களும் வழிபாடுகளும் மக் களைத் தீ நெறியினின்று விலக்கி நன்னெறிக்கண் செலுத்துகின் றன வேனும் மழை நன்கு பெய்யா தொழியின் இவ்வுலகில் அச் செயல்கள் நிகழ்வியலா என்பதனை இச் செய்யுள் விளக்குகின்ற.

# "முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

4-ம் ஆண்டுக் கையொப்பம்

(5-10-51 முதல்)

| | | |
|---|---|---|
| உள் நாடு | ரூ. | 4 0 0 |
| வெளி நாடு | ரூ. | 6 0 0 |
| தனித் தாள் | | 0 1 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன்பணத்துடன் எழுதுக.

முகவரி :—

குருகுலம், மாம்பாக்கம்,

மதுராந்தகம் P. O.

(தென் இந்தியா)


"யாதும் ஊரே, யாவரும் கேளிர்;
தீதும் நன்றும் பிறர்தர வாரா."

—புறநானூறு.


| | | |
|---|---|---|
| கிளை 4 | கர, தை, 8-2-52 வெள்ளி | தளிர் 19 |


# பொதுமை

"யான் எனது என்னும்
செருக்கறுப்பான் வானோர்க்(கு)
உயர்ந்த உலகம் புகும்"

—தமிழ் மறை.

அஃதாவது, யான் என்னும் அகப்பற்றும் எனது என்னும் புறப்பற்றும் ஆகிய செருக்கை அறுத்தவன் உயர்ந்த உலகில் புகுவான்; அவ்வுலகம் வானோர்க்கும் புகுதற்கு அரிது என்று திருவள்ளுவர் கூறியுள்ளார்.

பொதுமை என்பது "மார்க்ஸ்" காலத்திலிருந்தோ அல்லது அதற்குப் பிற்பட்டோ தான் தோன்றிற்று என்பதன்று, தமிழகம் நாகரிகத்தின் உச்ச நிலையிலே இருந்த சங்க காலத்தில் பொதுமைக்கும் உச்ச நிலை இருந்தது. அந்தப் பொதுமை—பொது உடைமை இப்போது சர்வ தேசிய (International) மயமாகி மலர்ந்துவரும் பொது உடைமை போன்றதன்றாயினும் முடியாட்சியின் நடுவண், அன்றும் பொது உடைமைப் பூங்கா மலர்ந்திருந்தது; அல்லது மலர வழி வகுத்தனர் ஆன்றோர் என்பது நன்கு விளங்கும்.

கடல் சூழ்ந்த உலகம் பொதுவானது; ஒருவருக்கும் தனித்த உரிமை உடையதன்று; எனெனில், நாம் பிறக்கும் பொழுது கொடு வந்ததில்லை. பிறந்து மண்மேல் இறக்கும் பொழுது கொடு போவதில்லை. இடை நடுவில் குறிக்கும்படித்தானது இச்செல்வம். இதைத் தேவைக்குத் தகப் பயன்படுத்துபவன் மனிதன். பல்லோர் தேவையைத் தன் ஒருவன் தேவைக்குப் பலியாக வாங்குபவன் மனிதரில் மிருகம்—காட்டுமிராண்டி.

உலகத்திலே விளையும் பயன்கள் யாவும் உழைப்பால் அமைவதனால் "உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ" என்று அறிந்தவர்கள் தங்கள் தேவைக்கேற்ப உழைத்தனர், உழைக்கின்றனர். உழைப்புக்கேற்ற ஊதியம் பெறுவோர் பலன் அடைந்தும் அடைகின்றதுமான காரணத்தினால் மகிழ்வுள்ளம் பெறுகின்றனர். மற்று, உழைப்புக் கேற்ற ஊதியம் அடையாமல் வாடுகின்றவர், வறுமையால் மடிகின்றனர். இவர்கள் இத்தகு நிலை அடையக் காரணமாக இருப்பவர்கள், மேல் இரண்டாவதாகக் கூறிய, தன் ஒருவன் தேவைக்குப் பல்லோர் தேவைகளைப் பலி வாங்கும் பேய்ப் பண்பினரேயாம்.

கடல் சூழ்ந்த உலகம் பொதுவானது என்னும் கொள்கை இன்று நேற்று ஏற்பட்டதன்று. அது இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர்த் தொகுக்கப்பட்ட புறநானூறு என்னும் தமிழ்க் கருவூலத்தில் காணப்படுவதாகும்.

இவ்வுலகம் பொதுவானது என்று கருதாமல் தானே யாவற்றிற்கும் தலைவனாய் வெண்கொற்றக் குடை நீழலிருந்து அரசோச்சும் அரசனுக்கும், இரவும் பகலும் கண் துஞ்சாணய்த் தன் உணவை நோக்கி "வில்லை ஏந்திய கையோடும்" காட்டு விலங்கினை எதிர் நோக்கும் கல்வி யுணர்வு இல்லாத ஒரு வேடனுக்கும் உள்ள தேவைகள் யாவை? அவர்கள் இருவரும் உண்பது நாழி உடுப்பவை இரண்டேதான். இல்லை இல்லை, வேறுபாடுகள் நனி உள என்றால் இங்கு நான் எடுத்துக் கொண்டது தேவைகள் யாவை என்பதுதான். அஃதாவது சுவையில் வகையில் உணவு வகையிலும், நிறத்தில் தரத்தில் உடை வகையிலும் வேறுபாடுகள் உளவேனும் இருவரின் இன்றியமையாத் தேவைகள் என்று கொள்ளுமளவில் முற்கூறியவற்றிலேயே அவை அடங்கும் என்பது. மற்றும் பிற இன்ப துன்ப உள்ள நுகர்ச்சிகளும் இருவருக்கும் ஒக்கும்.

"தெண்கடல் வளாகம்
பொதுமையின்றி
வெண்குடை நிழற்றிய
ஒருமை யோர்க்கும்
நடுநாள் யாமத்தும்
பகலும் துஞ்சான்

கடுமாப் பார்க்கும்
கல்லா ஒருவற்கும்
உண்பது நாழி உடுப்பவை
இரண்டே
பிறவும் எல்லாம்
ஓரொக்கும்மே.—(புறம்).

இப்பாட்டில் நாம் காண்பது இரண்டு முனைகள். மாறுபட்ட இருவர் துய்ப்பன ஒத்திருத்தல். ஒருவர் வெண்குடை நிழற்றும் இறை; மற்றவர் கடுமாய்ப் பார்க்கும் கல்லா ஒருவர். ஒன்று மலை, மற்றொன்று மடு; ஒன்று பூங்கா, மற்றொன்று பாலை. இந்த இரு துருவங்களையும் ஒன்றுசேர்க்க அப் புலவர் கையாண்டது என்னவெனில், அறிவுரை; அஃதாவது "செல்வத்துப்பயனே ஈதல்"; ஏனெனில், ஏதோ ஒரு வழியில் எப்படியோ தன்னிடம் வந்து சேர்ந்த செல்வத்தைத் தான் ஒருவனே துய்க்கலாம் என்று நினைத்து ஒழுகின் அவ்வழி தப்புவன பல; ஆதலால் 'செல்வம் தன்னகத்தே உடையோன் வறியவர்களுக்கு ஈக' என்ற அறிவுரையால் சமநிலை செய்ய விழைந்தார் புலவர். தமிழகம் அத்தகு சமநிலை அடைதலையே விழைந்தது அன்று.

அறிவுரை, சமயக் கொள்கை, துறவறம் முதலிய யாவும் உலகப் பொதுவானது. இன்பமும் துன்பமும் எல்லோருக்கும் வருவனவே. செல்வம் ஒன்றுதான் உயர்ந்தது என்பது பொருந்தாது என்று 2000 ஆண்டுகளாக வற்புறுத்தியுங் கூட உயர்வும் தாழ்வும் மாறவில்லை. பஞ்சையும் பாட்டாளியும் ஒரு புறம் தவிக்க, பணக்காரனும் நிலச்சுவான்தாரியும் உழைக்காமல் "வெய்துண்ட வியர்வல்லது" பிறவியர்வறியாராய் உள்ளனர்.

இதற்குத்தான் (மேற்கூறிய நிலைமாறத்தான்) பொது உடைமை தேவை என மேற்கும் கிழக்கும் போட்டியிட்டு முன்னேற்றம் அடைந்த வாறுள்ளன. இந்த நேரத்தில் நாம், இந்த வகையான, பிறர் கூறும் இக்காலப் பொது உடைமைத் தத்துவம் என்ன? அது நம் வாழ்வுக்குப் பொருந்துமா? அத்தகு நிலையில் நம் நாடு அமைந்தால் நாம் எல்லா விதத்திலும் உரிமை யுடையவராகி இருப்போமா? பின்னர் யாதொரு குறைபாடும் நமக்கு இலதாகுமா? அது வெற்றியுடன் இறுதிவரை இயங்குமா? என்பவைகளை எடுத்துப் பல கட்டுரைகள் மூலம் காணலாம்.

—'நலங்கிள்ளி.'

குருகுலக் கைத்தறிகளில்
நெய்த

**மேல் குட்டைகள்**
**(டவல்கள்)**

முறுக்கு நூலால் ஆனவை!
தூய்மையான சலவை!
கெட்டியான சாயம்!
அழகிய கரைகள்!

மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.

அளவுகள்: 24"X48"
26"X52"
28"X54"
30"X60"

வணிகர்க்கு,
தக்க கழிவுகள் உண்டு!

குருகுலம், மாம்பாக்கம்;
மதுராந்தகம் P. O.

## 'முல்லைக் கொடி' நேயர்க்கு

5-10-51– லிருந்து 'முல்லைக் கொடி'யின் புதிய ஆண்டு (4-ம் கிளை) தொடங்கி நடந்துவருகிறது.

சென்ற ஆண்டுக்குக் கையொப்பம் எந்த மாதம் அனுப்பியிருந்தாலும், சென்ற ஆண்டுடன் அது முடிவெய்தும். இதழ்கள் சேராமல் குறையிருந்தால் அன்பர்கள் அவற்றைத் தெரிவித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆகவே, இந்தப் புதிய ஆண்டுக்குப் புதுக் கையொப்பம் அனுப்பி வைக்க வேண்டும். இதுவரையில் அனுப்பாமலிருக்கும் அன்பர்கள், அன்பு கூர்ந்து, விரைவில் அனுப்பி வைப்பார்களாக!

செய்தியாளர்.

PHONE 55034 TEL. ENKAYAM
கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள்
கிசான் டிரேட்மார்க்




பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
53, கிடங்குதெரு சென்னை 1.

# சிலப்பதிகாரம்

## 16. மதுரைப் புறஞ்சேரி சேர்தல்

'முத்துசாமி'

அடியார்க்கு நல்லார் கருத்துப் படி கோவலனும் கண்ணகியும் மதுரைக்குப் புறப்பட்டது வைகாசித் திங்களின் இறுதியில். நாளொன்றுக்கு ஒரு காவதம் வீதம் சென்றனராதலால் ஆனித் திங்களிடையில் மதுரையை நெருங்கியிருத்தல் கூடும். வளமான சோழ நாட்டைக் கடந்த பின் வெயிலின் கொடுமை பொறுக்காமல் அவல முற்றனர். வழியிலுள்ள பொய்கைகளில் நீர் அருந்தி வேட்கை தீர்த்துக் கொண்டனர். சில சமயங்களில் வெயிலின் வெம்மைக் காற்ருது இரவிலே வழி நடந்தனர். அவர்கள் நடந்து சென்ற, பாதையோ வெட்ட வெளிக் காடு. இடையிடையே சிறு ஊர்கள் இருக்கும்.

பாண்டிய மன்னன் செங்கோல் தவருு ஆட்சியுடையவனைதலால் அவன் நாட்டில் கொடிய விலங்குகளாலாய துன்பமில்லை யென்றும் அதனுல் இரவிலே நிலவொளியில் நடந்து செல்லலாமென்றும் கோவலன் கூற, கவுந்தியடிகளும் அதற்கு உடன்பட மூவருமம அவ்வாறே புறப்பட்டுச் சென்றனர்.

நடந்து செல்கையில் வீண் பேச்சுப் பேசிக்கொண்டு செல்லவில்லை. கவுந்தியடிகள் அறவுரைகள் கூறக் கேட்டுக் கொண்டே சென்றனர். "அறவுரை கேட்டாங் காரிடை கழிந்து" என்று ஆசிரியர் கூறியிருப்பதை நோக்குக.

வைகறையில் பார்ப்பனர் உறையும் ஒரு பகுதியைச் சேர்ந்தனர். அப் பார்ப்பனரை "மறைநூல் வழுக்கத்துப் புரிநூல் மார்பர்" என்று ஆசிரியர் கூறியிருக்கின்றனர். தமக்குரிய ஒழுக்கந் தவறியவர்கள் என்பது பொருள். ஒழுக்கத்தில் தவறியவராயினும் புரிநூல் அணியும் வேடத்தை மட்டும் விடவில்லை. இக் காலத்தில் தமக்குரிய வேதம் ஓதல் ஓதுவித்தல் வேட்டல் வேட்பித்தல் ஈதல் எற்றல் என்னும் கடமைகளினின்றும் தவறிப் பொருள் காரணமாகப் பல்வேறு துறையிலும் புகுந்து வாழும் பார்ப்பனரைப் போன்று அக் காலத்திலும் இருந்தனர் போலும். ஒழுக்கந் தவறிய காரணத்தால் இவ் விலக்கியத்திலும் இழித்துப் பேசும் படியான நிலையில் அழியா இடம் பெற்று விட்டனர்.

ஒரு காப்பான இடத்தில் கண்ணகியையும் கவுந்தியடிகளையும் இருக்கச் செய்துவிட்டுக் கோவலன் ஒரு நீர்நிலையை யணுகினுன். நேரம் காலை நேரமானதால் அவன் சென்றது காலைக் கடன் முடித்தற் கெனலாம்.

ஆங்கு மாதவியால் விடுக்கப்பட்ட கோசிகன் என்னும் அந்தணன் கோவலனைக் கண்டு அவன் பிரிவால் அவனுடைய பெற்ரேர் அருமணி யிழந்த நாகம்போல் வருந்திய...தையும் சுற்றத்தார் இன்னுயிரிழந்த யாக்கை போலத் துன்ப முற்றதையும் ஏவலாளர் எங்கணும் சென்று தேடிக் கொணரப் பெயர்ந்ததையும், தந்தை சொற்படி நடத்தலே தலைசிறந்த அறமாகும் என்று இராமன் அரசைத் துறந்து அருங் கானடைய அதனுல் அவனைப் பிரியலுற்ற அயோத்தியைப் போலப் பூம்புகார் பெரும் பேதுற்றதையும் (பேதுறுதல்—அறிவு திரிவுறுதல்) தன் திருமுகத்தைக் கோவலன் மறுத்துவிட்டமையை வசந்தமாலை யிடத்துக் கேட்ட மாதவி பள்ளியில் மயங்கி வீழ்ந்ததையும், அங்ஙனம் அவள் துன்பமுற்ற செய்தி கேட்டுத் தான் (கோசிகன்) அங்குச் சென்ற காலை மாதவி தன் மலர்க்கையால் திருமுகம் எழுதி 'என் கண்மணி யனையார்க்குக் காட்டுக' என்று கொடுத்தனுப்பியதையும் விரித்துக் கூறித் தான் கொணர்ந்த ஓலையைக் கோவலன் கையில் கொடுத்தனன்.

மாதவி கணிகையர் குலத்துப் பிறந்தவளாளுலும் தவருன ஒழுக்க முடையவளல்லள். கோவலன் ஒருவனுடனே கூடி அவன் பிரிந்ததும் ஆருத் துயருற்று அத் துயரைத் தீர்த்துக் கொள்ள வேறுவழி காணுளாய் இருமுறை திருமுகம் விடுத்தனள். முதன் முறை வசந்தமாலையிடம் கொடுத்தனுப்பிய

Telegrams: "RAMBROS"
**N. Ramu Bros;**
GENERAL HARDWARE
MERCHANTS
AVANASHI ROAD,
COIMBATORE.

தைப் பார்த்தோம். ஈண்டு இரண்டாவது முறையாகக் கோசிகன்பால் கொடுத் தனுப்பிய முடங்கலைக் காண்போம்.

"அடிகள் முன்னர் யானடி
வீழ்ந்தேன்
வடியாக் கிளவி மனக்கொளல்
வேண்டும்
குரவர்பணி யன்றியுங் குலப்பிறப்
பாட்டியோ
டிரவிடைக் கழிதற் கென்பிழைப்
பறியாது
கையறு நெஞ்சங் கடியல்
வேண்டும்
பொய்தீர் காட்சிப் புரைபோய்
போற்றி"

"அடிகாள், திசை நோக்கி விழ்ந்து வணங்குகின்றேன். தெளிவில்லாத என் புன்மொழியை மனத்திற் கொள்ள வேண்டுகிறேன். பெற்றோர்க்குப் பணிவிடை செய்தல் ஒழிந்த தன்றியும் உயர் குடிப் பிறந்த கண்ணகியோடு இரவிலே செல்வதற்கு யான் என்ன குற்றம் செய்தேன் என்று அறியாது உள்ளம் செயலற்று வருந்துகிறது. அத் துயரத்தினை நீக்கல் வேண்டும். மெய்ம்மை வாய்ந்த அறிவுத் தெளிவுடைய மேலோய், வணக்கம்." இவ்வாறு அவள் எழுதியிருந்தனள்.

முதற்கண் பணிமொழி கூறிச், சொல்லவேண்டியதைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் சொல்லி இறுதியில் மறுமுறையும் வணக்கம் கூறி முடித்திருக்கும் அழகு காண்க.

கடற்கரையில் மாதவி கானல் வரிப் பாட்டுப் பாட, கோவலன் 'மாயப்பொய் பல கூட்டும் மாயத்தாள்' ஆதலின் வேறொன் றின் மீது மனம் வைத்துப் பாடினாள் என்று பிரிந்தான். அதன் பின்னர் வசந்தமாலையிடங் கொடுத் தனுப்பிய திருமுகத்தைப் பார்த்து ஆடல் மகளாதலின் பலவாறும் நடித்தல் அவட்கு இயல்பு என்று கூறி விட்டுக் கண்ணகியோடும் மதுரைக்குப் புறப்பட்டனன். இரண்டாவது முறையாகக் கோசிகனிடம் கொடுத் தனுப்பிய இவ் வோலையைப் பார்த்தபின்பு தான் அவள் தீதிலள் என்று உணர்ந்தான்.

மாதவி தீதிலள் என்று உணர்ந்த பின்னும் கோவலன் திரும்பி அவளிடம் செல்லவில்லை. ஊழ்வினை மதுரையை நோக்கிச் செலுத்தியதால் அப் பயணத்திலேயே கருத்தாயிருந்தான்.

ஓலையிற் கண்ட வாசகம் கோவலனது பெற்றோர்க்கு அவன் எழுதியது போலவே சொல்லும் பொருளும் பொருத்தமாக அமைந்திருத்தலால் அதனையே தான் தந்ததாகப் பெற்றோர்க்குக் கொடுக்கும்படி சொல்லிக் கோசிகனை யனுப்பி விட்டுக் கவுந்தியடிகளும் கண்ணகியும் இருக்குமிடம் சென்று சேர்ந்தனன்.

அவ் வோலை கோவலன் தன் பெற்றோர்க்கு எழுதியது போல எவ்வாறு பொருந்தி யிருந்ததென்று பார்த்து மேற் செல்வோம்.

"அடிகாள், திசை நோக்கி வணங்குகின்றேன். தெளிவில்லாத என் புன்மொழியை மனத்திற் கொள்ளவேண்டும். உங்களுக்குச் செய்யும் பணி தவறியதன்றியும் உயர்குடிப் பிறந்த கண்ணகியோடும் இரவில் சென்ற என் பிழையை மறந்து தளர்ச்சியினைப் போக்குதல் வேண்டும். மெய்ம்மை வாய்ந்த அறிவுத் தெளிவுடைய பெரியோய், வணக்கம்" இது, அவன் தன் பெற்றோர்க்கு எழுதியபடி பொருந்திய விதம்.

அருகில் ஓரிடத்தில் பாணர் கொற்றவையின் போர்த்திறத்தைப் பாடிக்கொண் டிருந்தனர். அவர்களுடன் தானும் கலந்து யாழ் வாசித்தனன்.

கோவலன் சிறந்த கலையார்வமுடையவன். கண்ணகியை விட்டு மாதவியால் ஈர்ப்புண்டது ஊழ்வினைக் காரண மன்றியும் அவள்பாலுள்ள கலைத் திறமும் ஒரு காரணமாகும். அவன் நன்றாய் யாழ் வாசிக்கத் தெரிந்தவன் என்பது முன்னர்க் கடற் கானலில் வரிப் பாட்டுகளை யாழிலிட்டு வாசித்தான் என்று வந்தமையாலும் ஈண்டு வழிச் செலவின் போது பாணரைக் கண்டதும் கலையார்வம் தலைதூக்கி உந்த அவர்களோடு கலந்து யாழ் வாசித்தான் என்று வரும் பகுதியாலும் அறியலாம்.

யாழ் வாசித்த பின்னர் மதுரை இன்னும் எவ்வளவு தூரம் என்று கேட்க அவர்கள், "அண்மையில் உள்ளது; மதுரைத் தென்றல் வீசுவது காணீர்" என்றனர்.

பின்பு, முன்னைப் போலவே இரவில் வழிநடந்து, இறைவன் கோயிலினின்றும் மன்னன் அரண்மனையினின்றும் எழுந்த முரசொலியும், நான்மறை யந்தணர் நவின்ற வேத ஒலியும், போர்யானையின் முழக்கமும், புரவிகளின் ஓசையும் மள்ளர் கொட்டிய மருதப் பறை ஒலியும்,

தம்முட்கலந்து கடலொலி போல வந்து எதிர்கொள்ள வழி நடை யவலமின்றிச் சென்றனர்.

மதுரைக்கு வடக்கே வையை யாறு உள்ளது. அதனைக் கடந்து மதுரையை யடைய வேண்டும்; வையையில் நீர் நிறைந்தோடுங் காலத்து ஓடங்களிற் சென்று கடப்பர். அதற்கான துறையும் உண்டு. ஓடங்களைப் பற்றிக் குறிப்பிடும்போது "பரி முக அம்பியும் கரி முக அம்பியும் அரி முக அம்பியும்" என்று ஆசிரியர் குறிப்பிடுவதால் ஓடத்தின் முனைப் பாகத்தினைக் குதிரை முக வடிவிலும் யானைமுக வடிவிலும் சிங்கமுக வடிவிலும் செய்யும் வழக்கம் கொண்டிருந்தனர் என்று தெரிகிறது.

கோவலன் முதலிய மூவரும் ஓடத்திலேறிக் கடந்து வழக்கமாக மக்கள் இறங்கும் துறையில் இறங்காமல் ஒரு மாப்புணையின் துணை கொண்டு துறை மருங்கில் ஓரிடத்தில் இறங்கினர்.

அவ்வாறு சென்றவர் மதுரையின் கீழ்த் திசை வாயிலுக்கு அயலாயதோர் புறஞ்சேரி சேர்ந்தனர். அவ்விடத்தை "அறம் புரி மாந்தர் அன்றிச் சேராப் புறஞ்சிறை மூதூர்" என்றனராதலின் அறம்புரியும் துறவிகள் வாழுமிடம் என்று தெரிகிறது. மேல் அடைக்கலக் காதையில் மாடலன் "அறத்துறை மக்கட்கல்ல திந்தப் புறஞ்சிறை யிருக்கை பொருந்தா தாகலின்" என்று கூறுவதும் இதனை வலியுறுத்தும்.

---

# * குருகுலத்தில் * * * ஒரு கிழமை

ஆசிரியர் இளவழகனார் அவர்கள், அன்பர் பலர் கருதுகிறபடி சென்னையிலேயே இருந்து கொண்டு நூல் தொண்டும் விரிவுரைத் தொண்டும் செய்து வரலாமாயினும், தாம் பிறந்த ஊராகிய மாம்பாக்கத்தில் சிறப்பு முறையில் குருகுலம் ஒன்று அமைத்து இயன்ற அகப்புற முயற்சிகளையும் ஆற்றி வருகிறார்கள்.

அக் குருகுலத்தைத் திருவள்ளுவர் அதிகார முறைப்படி திருக்குறட் செயலகமாக ஆக்கவும், மன்பதைகளின் உயர்வுக்கான எல்லாப் பணிகளையும் பன்னிரண்டு, பிரிவுகளில் அடக்கி ஆற்றவும் பெருந்திட்டங்களை வகுத்து முயன்று வருகிறார்கள். பார்ப்பவர் கேட்பவர் சிலர், "இவை எல்லாம் எளிய செயல்களா? நூறாயிரக் கணக்கான பொருள்களல்லவா இவற்றிற்காக வேண்டும்! பெரு நிலக் கிழார்களும், குறுநில மன்னர்களும் கோடீச்சுரர்களும் அரசினரும் மேற்கொள்ளத்தக்க செயலை அன்றோ இவர்கள் மேற்கொண்டிருக்கிறார்கள்!" என்றெல்லாம் வியந்து எண்ணிப், பலப்பல பேசுவதும் உண்டு.

குருகுலத் தொண்டுகளினாலும், அவற்றால் நேரும் உழைப்புகளினாலுமே அவர்களின் நூல் தொண்டுகள் கருதத் தக்கபடி நடைபெறவில்லை; இதனை அறிந்து குறைப்படுபவர்களும் வருந்துபவர்களும் பலர். அவர்களில் யானும் ஒருவன். ஆசிரியர் அவர்களின் குறிப்பறிந்து இயன்றவரையேனும் ஒழுகுதலே நூற்றாண்டும் நடைபெறுதற்குத் துணை செய்யும் என்று தெரிகிறது. நிற்க, ஆசிரியர் அவர்களுக்கும் நம் தமிழ் நாட்டின் மொழி, சமயம், தொழில், அரசு, கலை முதலியவற்றின் பெரு விளக்கத்துக்கான நூல்கள் பலவற்றை எழுதவேண்டும் என்கிற ஆர்வம் மிகுதியாக உண்டானாலும், குருகுலப் பணிகளிலேயே தற்காலம் பெரிதும் கருத்திருத்தி ஏதேதோ செய்து வருகிறார்கள்.

வழிபாடு, பள்ளிக்கூடம், அச்சகம் முதலியவற்றிற்கு இப்போது பயன்பட்டுவரும் கட்டடம் ஒன்றை அமைக்கவும், அவ்வப்போதுள்ள சூழல்களுக் கேற்பக் குருகுலத்துக்கு இன்றியமையாததான நிலப் பகுதிகளை ஒழுங்கு செய்யவும், திறப்பு விழா ஒன்றை நடத்தவும், இரண்டாண்டுகட்கு முன் ஆசிரியர் எடுத்துக் கொண்ட முயற்சியும் பிறவும் எட்டிலடங்கா! அக் காலங்களில், ஓர் அரும் பேராசிரியராக இருக்கின்ற அவர்கள் உடலால் மேற்கொண்ட உழைப்பை உடனிருந்து கண்ட என்போல்வார் எய்திய வியப்பு இவ்வளவு அவ்வளவு என்று சொல்ல முடியாது.

இனி, செயலை மேற்கொண்ட பின் ஏற்பட்ட பொருள் முடைக்கும் நெருக்கடிகட்கும் கணக்கே இல்லை. எல்லாவற்றையும் எவ்வெவ்வாறோ சமாளித்துக் கொண்டு, குருகுலத்தின் மேன்மேல் வளர்ச்சிகளிலேயே கருத்

திருத்திவரும் ஆசிரியர் நிலையைக் கண்டு, 'என்றுன் இவர்களுக்கு இத்துணை ஆர்வமும் முயற்சியும்!' என்று வறிதே இரங்குவாரும், சில நேரங்களில் அவர்கள் மேற்கொள்ளும் நோன்பு முதலிய நிலைகளைக் கண்டு அவர்களின் உள்ளத்தையும், விரதங்களையுங்கூட ஐயுற்றுப் பலபடியாக நினைப்பவர்களும் உண்டு.

"ஐயுறுவது தவறன்று; ஐயம் திரிபு இவைகளில் ஐயம் நல்லது; திரிபுணர்ச்சிதான் கூடாது; ஐயுற்று ஆராய்ந்து நேரிலும் கேட்டுத் தெளிந்தே எதையும் ஒப்புக்கொள்ள வேண்டும்; அதுவே அறிவுடைமைக்கு அடையாளமும் அழகும்; எனவே நாம் எந்த வகைகளில் ஐயுற்ருலும் நிலைமைகளை நன்கு ஆராய்ந்து ஒரு சரியான முடிபுக்கு வர வேண்டும்;

நம் முடிபு சரிதானு என்பதை உரியவர்களிடம் நேரில் பேசியும் உறுதிப் படுத்திக் கொள்ள வேண்டும்; தக்கோராயிருந்தால் கட்டாயம் நம்முடைய ஐயங்களை அமைதியாகக் கேட்டுத் தெளிவு செய்வார்கள்; செய்யாவிட்டால், அதிலிருந்தே அவர்களின் தகுதிகளை நாம் நன்கு உணர்ந்து கொள்ளலாம்" என்பன ஆசிரியரின் அறிவுரைகள்.

இவ்வகையில் யான் அவ்வப்போது ஆசிரியர் அவர்களின் பல்வகை நிலைகளைப் பற்றியும் நேரில் காரணங்கள் கேட்டுத் தெளிவு பெறுவது வழக்கம். உரிமையோடு வாதிட்டும் யான் பெற்ற விளக்கமும் ஊக்கமும் மிகுதி. நிற்க, மாம்பாக்கத்தில் அவர்கள் அமைத்துவரும் குருகுலம், எல்லா வகைகளிலும் மேன்மேல்வளர்ச்சியும் சிறப்பும், இனி எய்தவேண்டும். திறப்பு விழாச் செய்து இரண்டாண்டுகள் ஆய்விட்டன; என்ருலும் கருதிய வளர்ச்சி நிலைகள் இன்னும் வாய்க்கவில்லை. அச்சகம், இதழ் நிலையம், முதியோர் பள்ளி, பள்ளி, பயிர்ப்பண்ணை, தொழிற்சாலை முதலிய சில அமைப்புகள் ஓர் அளவில் அமைந்திருக்கின்றன. கோயிலமைப்பு, குளத் திருத்தம், உண்டிச்சாலை, ஆன்நிலை முதலிய அமைப்புகள் அண்மையில் ஏற்பட இருக்கின்றன. குருகுல அன்பர் மூவர், தம வாழ்க்கையையே குருகுலத்தோடு இணைத்துக் கொண்டு, குடும்பத்துடன் அங்கே சென்றிருக்கின்றனர்.

இந்நிலையில், எளியேனுக்கு நேர்ந்த உடல்நலக் குறைவை முன்னிட்டுச் சென்னையை விட்டு அமைதியாக எங்கேனும் சிற்றூரில் தங்கிச் சில நாட்கள் நாட்டு மருந்துண்ணலாம் என்று திட்டமிட்டிருந்தேன்; அதை அறிந்து மாம்பாக்கம் சென்று தங்கியுள்ள திரு. சரசுவதியம்மையார் என்னும் அன்புத் தாய் அங்கே வந்து தங்கி மருந்துண்ணுமாறு வற்புறுத்தினர்கள்; யானும் குருகுலத்தின் பலவகை நிலைகளையும், சென்று தங்கியுள்ள அன்பர்களின் நிலையையும் நேரில் அறிந்து வரலாம் என்று எண்ணி 18-1-52 அன்று சென்று 26-1-52 வரை அங்கே தங்கினேன். ஆசிரியர் அவர்கள் இந்நாட்களில் இரண்டொரு நாட்களே அங்கிருந்தார்கள். மற்ற நாட்களில் சென்னையில் இருந்தார்கள். மருந்துண்பதற்கான வசதிகளை மேற் குறிப்பிட்ட அம்மையார் அவர்களே மிகவும் அன்போடு செய்தளித்தார்கள்.

குருகுலத்தில் தங்கிய 7-8 நாட்களில் யான் பெற்ற நலங்களில் சிலவற்றை ஈண்டுக் குறிப்பிட விழைகின்றேன்.

மன ஒருமை வாழ்க்கைக்கு இன்றியமையாதது; உடல் நலத்துக்கும் உள்ளக் கிளர்ச்சிக்கும் அதுவே பெருந்துணை செய்யும். சென்னையில் உள்ள எனக்கு இடம் பொருள் ஏவல்களாலும், குடும்பம், அலுவல், தொண்டு முதலிய நிலைகளாலும் மன ஒருமை மிக மிகக் குறைவு, மாம்பாக்கம் வாழ்வு, எனக்கு உண்மையிலேயே மிக்க மன ஒருமையை அளித்து ஊக்கமூட்டிற்று. ஆசிரியர் அவர்களுடைய ஒருமை எண்ணங்களின் உலவுதல்களே அதற்குக்

நஞ்சன்கூடு பல்பொடி.
பாக்டெரியாரின்
நம்பிக்கை பெற்ற ஆயுர்வேத உதவிகள்

காஸ்மஸ்
கஸ்தூரி மாத்திரை
கர்ஜன்
கோரோஜனை மாத்திரை
பாலக்ஸ்
பேதியாக மாத்திரை
சிசுராக் குழந்தை டானிக்
பிமலெக்ஸ்டானிக்
யூடினல்
கர்பிணிகளுக்கு
டோனடெல்
பிரஸவமானபின் டானிக்
ஹிஸ்மெனே டானிக்
பிரதமென்ஸ்
சூதக கோளாருகளுக்கு

யுனைடெட் கன்ஸர்ன்,
54, பந்தர் தெரு, :: சென்னை-1.

# தென்னிந்திய ஜீவரக்ஷா பிரசார சபையின் முயற்சியும் வெற்றியும்!

சென்னைத் தங்கசாலையில் உள்ள மேற்படி சபை 1926-ம் ஆண்டு முதல் இந்நாட்டில் பணியாற்றி வருகின்றது.

உயிர்களில் மக்கள் சிறந்தவர்கள்; அவர்கள், தமக்குக் கீழ்ப்பட்ட சிற்றுயிர்களை, அதுவும் சாதுவான ஆடுமாடு போன்ற நல்லுயிர்களைத் தம் உணவுக்காகவும் தெய்வத்துக்குப் பலி என்னும் பொருட்டும் கொலை புரிவது பெருங் கொடுமை! இத் தீவினையிலிருந்து மக்களை மீட்டி, உயிர்களையும் காப்பாற்றி, நாகரீக வாழ்வை நாட்டில் நிலை நாட்டும் நன் முயற்சியில் மேற்படி சபை கால் நூற்றாண்டாகப் பெரிதும் பாடுபட்டு வருகிறது.

சபை வெளியிட்ட நூல்கள், இதழ்கள், துண்டு அறிக்கைகள், சுவரொட்டிகள், சுற்றுச் சொற்பொழிவுகள் (பிரசாரம்) முதலியவற்றிற்குக் கணக்கு வழக்கில்லை. இவற்றின் பயனாக நூற்றுக் கணக்கான கோயில்களில் பல்லாண்டுகளாக நடைபெற்று வந்த வெட்கப் படத்தக்க சிற்றுயிர்ப் பலிகள் நிறுத்தப் பட்டுவிட்டன.

மேலும், நாடு உரிமை பெற்ற பின், நமது சென்னைச் சட்ட சபையில் பலிவிலக்குச் சட்டமும் 26-1-49 ல் பிறந்து 1-6-51 முதல் நடவடிக்கைக்கு வந்திருக்கிறது. இவ் வெற்றிக்குச் சபையின் முயற்சி பெருங்காரணமாகும்!

சபையின் இத்தகு முயற்சிகட்கெல்லாம் முதல்வராகவும் சபையின் விளக்கத்துக்கே காரணமாகவும் இருப்பவர், ஜீவபந்து T. S. ஸ்ரீபால் என்னும் அருந்தொண்டராவர்! இடையறாத அவர் தம் தொண்டு, திறனும் ஆற்றலும் பயனும் வாய்ந்தது!

பலி விலக்குச் சட்டத்துக்கு முன்னும் பின்னும் அவர் எழுதிய கிள்ளை விடுதூதும் வெற்றியும் என்னும் சிறு செய்யுள் நூல், பலி விலக்குச் சட்ட விவரங்களுடன் சபையின் இலவச் வெளியீடாக வெளிவந்திருக்கிறது. எளிய தமிழ் நடையில் இசைப் பாட்டால் இயன்ற இச் சிறு நூல், உருக்கமும் நல்லுணர்வும் ஒருங்கே தருகின்றது. வேண்டுவோர் எழுதிப் பெற்றுப் படித்தும் பாடியும் நலம் பெறலாம்; பிறரிடையிலும், பரவ வைக்கலாம்.

இனி இச் சபை, 'புலால் மறுத்தல்' என்னும் துறையில் தொடர்ந்து பணியாற்றும் என்றும், தக்க இதழ் ஒன்றையும் அதற்காகத் தொடங்கி நடத்தும் என்றும் தெரிகிறது. நாட்டவர் ஊக்கமும் துணையும் அதற்கு ஆக்கமாய் நிற்குமாக! வெல்க தொண்டுகள்!

---

(7-ம் பக்கம் தொடர்ச்சி)

காரணம் என்று எண்ணுகின்றேன்.

இரவில் வெண்ணிலவில் அமர்ந்து மகிழத்தக்க பாறைகளை அங்கங்கும் உடையதாய் இருக்கின்ற வெறும் முல்லை நிலமாய் உள்ள அந்த இடமெங்கும் ஆசிரியரின் சான்றாண்மைக் குணங்களும், ஆக்க நினைவுகளும் பதிந்து, பக்குவமுடையாரைத் தூய்மைப் படுத்திக்கொண்டிருக்கின்றன.

அருணகிரி நாதரது திருப்புகழ்ப்பாடல் பெற்ற வட திருச்சிற்றம்பலப் பெரு வெளியாக உள்ளது குருகுலம்; தூய மனவுணர்வை அது தருகின்றது. அதன் வெட்டவெளித் தன்மைக்கேற்ப அவ்விடத்துத் தூய காற்று, வேனிலிற் சிறிது வெப்பம் தருவதெனினும், உடல் நலத்துக்கு மிகவும் ஏற்றதாக இருக்கிறது.

பாறைகளை உடைத்தெடுத்த கிணறுகளில் ஊறும் ஊற்று நீர், முழுக்குக்கும் மனத்துக்கும் மிக்க இனிமையாகவும் ஆறுதலாகவும் இருக்கிறது, காய்ச்சல்காரர்களுக்கும் அது நலம் செய்யக் கூடியதாக இருக்கிறது.

எளிய வாழ்வும் இனிய நினைவும் கொண்டு அமைதியாகத் தொண்டு செய்ய விழைவார்க்கு, ஏற்ற இடமாகமாம்பாக்கம் இருக்கிறது. போதுமென்ற மனமும் புனிதத் தன்மையும் கொண்டு பணி நோக்குடன் அங்கே சென்றால் அவரவர்களின் உணர்வு நிலைகளுக் கேற்ப நலங்கள் கிடைப்பது உறுதி.

எனது வாழ்வில் ஒரு புதிய ஊக்கமும், தூய்மையும் அரும்பியிருக்கிறது. ஆசிரியரின் வாழ்த்துதல்களாலும் திருவருளின் துணையினாலும் அவை மேன்மேல் வளர்ந்து உலகுக்கு நலம் செய்யும் என்னும் நம்பிக்கை உடையேன்.

தக்க தொண்டுள்ள முடைய அன்பர்கள் இக்குருகுலச் செய்கைகளில் ஈடுபட்டால் நாடு நன்கு ஓங்கி அவரவரும் நன்மை பல பெறலாம் என்பதில் ஐயமில்லை. ஏற்ற எல்லா அடிப்படைகளும் குருகுலத்தில் நன்றாக அமைந்திருக்கின்றன. ஓங்கிப் பயன் விளைவதுதான் இனி நிகழ வேண்டுவது! இந்நாட்டின் பலவகைச்சூழல்களையும் உட்கொண்ட நடு நிலையான ஆக்கப்பணிகளுக்கெல்லாம் அடி கோலி, எல்லார்க்கும் இடம் தர இப்போது ஆயத்தமாய் முன்னிற்கிறது பாம்பாக்கம் குருகுலம்! —ஆடலரசு.

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்: தி. சு. பாலசுந்தரம்; குருகுல அச்சகம் மாம்பாக்கம்; மதுராந்தகம். (அஞ்.)